# திருமால் கரம் தன்னில்.



திருமால் கரம்தன்னில் விளங்கிடும் சங்கமே- அவன் ,

திருவாய் அமுதம் சுவைத்திட இருப்பாயங்கே !

திருமால்.......

பஞ்சனனின் வயிற்றினில் உதித்தவனே ,

அஞ்சவைத்து அரக்கரை அழிப்பவனே ;

தஞ்சமெனவுனை அடைந்தவர்களையும் ,

வஞ்சமின்றி காக்கும் பாஞ்சஜன்யமே !

திருமால்........

பஞ்சாயுதங்களில் ஒன்றாய்த் திகழ்பவரே ,

வஞ்சமாயன்று துரோணரை மாய்த்தவரே ;

அஞ்சாமல் இடிமுழக்கத்தை செய்பவரே ,

துஞ்ச தோள் சேர்ந்திட்ட பாஞ்சஜன்யமே !

திருமால்.........